பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 10 2025 THURSDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, மேற்கு மற்றும் வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து, காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சென்னையில் உள்ள சுரங்கப்பாதைகளில் தேங்கும் மழை நீரை உடனுக்குடன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.
- நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து உடனுக்குடன் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- சமூக ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்களை நீக்குவதற்கு, இனி அரசின் இணைச் செயலாளர் அந்தஸ்திற்கு குறையாத அதிகாரிகள் மட்டுமே உத்தரவிட முடியும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- சுவிட்சர்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் Ben Shelton இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>>><<<<<

வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, வடதமிழகம் - தெற்கு ஆந்திரா இடையே மேற்கு மற்றும் வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து, காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், நிலகிரி, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பெய்யும் கனமழை காரணமாக, வீடூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்ததை அடுத்து, அந்த அணையிலிருந்து உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேஷ் 53 செகண்ட்ஸ்)

ஈரோடு மாவட்டம், தாளவாடி மலைப்பகுதியில் பெய்யும் கனமழையால் அப்பகுதியில் உள்ள தரைப்பாலம் மூழ்கியபடி, காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், மலை கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, இம்மாவட்டத்தில் உள்ள கடம்பூர் மலைப்பாதையில் மண்சரிவு ஏற்பட்டதால் போக்குவரத்து தடைபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்-மூர்த்தி 34 செகண்ட்ஸ்)

திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகேயுள்ள திருமூர்த்திமலை, பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், கோவில் நடை அடைக்கப்பட்டு, பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருவதை அடுத்து, உபரிநீர் வெளியேற்றப்படுவதால், கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தனசேகரன் 52 செகண்ட்ஸ்)

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகேயுள்ள ஆண்டிப்பட்டி சுற்றுவட்டாரத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல், கொள்முதல் செய்யப்படாததால், மழையில் நனைந்து சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அறுவடை செய்த நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்சி, கரூர், பெரம்பலூர், வேலூர், கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டங்களிலும் வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர் மழை காரணமாக, தருமபுரி மாவட்டத்தில் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு நேற்று ஆய்வு செய்தார்.

பெருங்குடி, ஒக்கியம் மடுவு, சோளிங்கநல்லூர், பள்ளிக்கரணை பகுதிகளைப் பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் உள்ள ஏழு சுரங்கப்பாதைகளில் தேங்கும் மழை நீரை உடனுக்குடன் வெளியேற்ற பம்ப்செட்கள் தயாராக இருப்பதுடன், 34 வெள்ள ரோந்து குழுவினர், 24 மணிநேர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதுதவிர, மழைநீர் அதிகம் தேங்கக்கூடிய இடங்களில் ராட்சத மோட்டார்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் திரு. எ.வ. வேலு குறிப்பிட்டார்.

நாகப்பட்டிணம் மாவட்டத்தில் நெல் கொள்முதல் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் பேசிய உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி, அனைத்து மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படும் நெல்லை பாதுகாக்கவும், அவற்றை தாமதமின்றி, கிடங்குகள் மற்றும் அரவை ஆலைகளுக்கு அனுப்பும்படி, மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

டெல்டா மாவட்ட ஆட்சியர்களின் கோரிக்கைபடி, 22 சதவீத ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு. சக்கரபாணி தெரிவித்தார்.

>>>>>><<<<<

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை உடனுக்குடன் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை சந்தித்த அவர். நெல் கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 20 நாட்களாக நெல்கொள்முதல் செய்யாமல் காலதாமதம் செய்ததன் காரணமாக, விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகி வருவதாக கூறியுள்ளார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் ஒரு நாளைக்கு ஆயிரம் நெல் மூட்டைகள் எடை போட்டு கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், தற்போதைய திமுக ஆட்சியில் 800 முதல் 900 மூட்டைகள் தான் எடை போடப்படுவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

>>>>>><<<<<

சமூக ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்களை நீக்குவதற்கு, இனி அரசின் இணைச் செயலாளர் அல்லது காவல்துறை டி.ஐ.ஜி. அந்தஸ்திற்கு குறையாத அதிகாரிகள் மட்டுமே உத்தரவிட முடியும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான சட்டத்திருத்தம், அடுத்த மாதம் 1-ந் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட சட்டவிரோத கருத்துக்களை நீக்கும் நடைமுறை, வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள வகையில் மேற்கொள்ளப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

புதிய சட்டத் திருத்தத்தின்படி, நீதிமன்ற உத்தரவு அல்லது அரசு அறிவிக்கை வாயிலாக மட்டுமே, சர்ச்சைக்குரிய கருத்துக்களை நீக்க முடியும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

யுக்ரைன் மீது, ரஷ்யா நடத்திய ஏவகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினருக்கு இடையேயான போர் நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகு காஸா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை 986 ட்ரக்குகளில் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பாலஸ்தீன அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

>>>>>><<<<<

நேபாளத்திலிருந்து மேற்குவங்க மாநிலம், டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள Mirik நகருக்கு வந்து கொண்டிருந்த பேருந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர், 10க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

>>>>>><<<<<

கேதார்நாத் புனித யாத்திரை இன்று நிறைவு பெறுவதாக உத்ராகண்ட்டின் ருத்ரபிரயாக் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

சத் பண்டிகையை முன்னிட்டு, கோவை போத்தனூரிலிருந்து பீகார் மாநிலம், Barauni-க்கு நாளை இரவு 8 மணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. மறுமார்க்கத்தில் Barauni-யிலிருந்து இந்த ரயில், 27ஆம் தேதி புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

தமிழக அரசின் நடப்பாண்டிற்கான வைக்கம் விருது அமெரிக்காவின் கலிஃபோர்னியாவைச் சேர்ந்த திருமதி. தேன்மொழி சௌந்தரராஜனுக்கு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

காஞ்சிபுரத்தில் உள்ள முருகன் கோவில்களில் கந்தசஷ்டி தொடக்கத்தை ஒட்டி, இன்று சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் Ben Shelton இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

Besel-ல் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் இந்த இணை, மொனாக்கோவின் Hugo Nys – பிரான்ஸின் Edouard Roger Vasselin இணையை 7-6, 6-7, 10-1 என்ற செட்கணக்கில் வென்றது.

>>>>>><<<<<